செ.வெ.எண்: 33 நாள்: 15.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற 75-வது சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, 99 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இன்று (15.08.2021) நடைபெற்ற 75-வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பை பார்வையிட்டு, மரியாதையை ஏற்றுக்கொண்டு, 99 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே ஆயிரத்து இருபத்து ஆறு மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சுதந்திர தின விழாவில் ஊரக வளர்ச்சி/உள்ளாட்சித்துறையில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 26 நபர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டிற்கான குடும்ப நலத்திட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 78 நபருக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் 25 ஆண்டு காலம் எவ்வித தண்டனையுமின்றி சிறப்பாக பணிபுரிந்த 22 நபர்களுக்கும், சமூக பாதுகாப்புத்துறையில் கொரோனா பேரிடரில் பெற்றோரை இழந்த குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் மற்றும் அரசின் நிதி உதவிப்பெற சிறப்பாக பணி செய்தமைக்காக 3 நபர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் கொரோனா மற்றும் பேரிடர் காலங்களில் சிறப்பாக பணிபுரிந்த 2 நபர்களுக்கும், தோட்டக்கலைத் துறையில் அலுவலக பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 2 நபர்களுக்கும், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் அலுவலக பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 3 நபர்களுக்கும், பள்ளிக் கல்வித்துறையில் கொரோனா நிவாரண பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 4 நபர்களுக்கும், மாவட்ட கருவூலம் மற்றும் கணக்குத்துறை சார்பில் அலுவலகப் பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 1 நபருக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையில் கொரோனா ஊரடங்கு காலத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்தமைக்காக 1 நபருக்கும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் கொரோனா நோய்தொற்று காலத்தில் பொது விநியோகத்திட்ட பணிகளை சிறப்பாக மேற்கொண்டமைக்காக 1 நபருக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் விதைப்பண்ணை பதிவு மற்றும் கொள்முதலில் சிறப்பாக சாதனை புரிந்தமைக்காக 1 நபருக்கும், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையில் வனவிலங்குகள், பறவைகள் பாதுகாப்பு மற்றும் ஆமை முட்டைகள் சேகரிக்கும் பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 1 நபருக்கும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பேரிடர் காலங்களில் சிறப்பாக பணிபுரிந்த 3 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 5 நபர்களுக்கும், தேசிய தகவலியல் மையம் சார்பில் கொரோனா காலத்தில் காணொலிக்காட்சி கூட்ட ஏற்பாடுகள் சிறப்பாக அமைத்தமைக்காக 2 நபர்களுக்கும் மற்றும் பேரிடர் காலங்களில் சிறப்பாக பணிபுரிந்த தன்னார்வலர்கள் 8 நபர்கள் என மொத்தம் 163 நபர்களுக்கு பதக்கம், நினைவுப்பரிசு, ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாவட்டத்தில் முதன் முறையாக 4 பயனாளிக்கு ரூ.1,40,000 மதிப்பிலான எலக்ட்ரானிக் பிரெய்லி ரீடர், மற்றும் மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியிலிருந்து 2 பயனாளிகளுக்கு ரூ.83,100 மதிப்பீட்டில் இருசக்கர வாகனம் மற்றும் தையல் இயந்திரத்தையும், வருவாய்த்துறை சார்பில் 22 பயனாளிகளுக்கு ரூ.2,68,000 மதிப்பில் முதியோர் உதவித் தொகை, விதவைத் தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை, ஊனமுற்றோர்க்கு உதவி, திருமண உதவித் தொகை, குடிமனை பட்டா ஆகிய நலத்த திட்டங்களையும், முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.50,000 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.5,58,900 மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனை பட்டா நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.73,050 மதிப்பீட்டில் சலவைப்பெட்டி வழங்குதலும், தோட்டக்கலைத் துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.38,865 மதிப்பீட்டில் PMKSY Sprinkler மற்றும் மா ஒட்டுக் கன்றுகள் வழங்குதலும், மகளிர் திட்டம் சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூ.14,30,000 மதிப்பீட்டில் வங்கிக்கடன் மற்றும் சிறந்த வங்கிக்கான நினைவுப் பரிசு வழங்குதலும், தாட்கோ சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.30,72,111 மதிப்பீட்டில் சுய தொழில் செய்திட வாகனங்கள் வழங்குதலும், வேளாண்மை துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.1,20,000 மதிப்பீட்டில் இயற்கை முறையில் 7 வகையான பாரம்பரிய நெல் இரகங்களை சாகுபடி செய்து மகசூல் அடைந்தமைக்காக மற்றும் இதர இனங்கள் (ஆயில் இன்ஜின்) வழங்குதலும், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.34,48,000 மதிப்பீட்டில் தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரம் வழங்குதலும், சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டம் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.15,000 மதிப்பீட்டில் பரிசுத்தொகையையும், கலை பண்பாட்டுத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.14,000 மதிப்பீட்டில் நாட்டுப்புறக் கலைஞர்கள் குழந்தைகளின் கல்வி உதவித் தொகையையும்,

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.6,90,000 மதிப்பீட்டில் ஊரக புத்தாக்கத் திட்டம் மற்றும் மாவட்ட தொழில் மையம் இணைந்து வழங்கப்படும் கடன் தொகை என மொத்தம் 99 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே ஆயிரத்து இருபத்து ஆறு மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கு. ஜவஹர் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பே.பெரியசாமி, மாவட்ட வன பாதுகாப்பு அலுவலர் திரு.எஸ்.கலாநிதி,இ.வ.ப, துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி. எம்.சௌமியா மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எம்.குணசேகரன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள், ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**